**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.**
**முன்னிலை : செல்வி.S.ஆக்னஸ் ஜெப கிருபா, எம்.எல்.,**
நீதித்துறை நடுவர், திருவையாறு

**2026-ம் வருடம் மார்ச் மாதம், 30-ம் நாள், திங்கள்கிழமை**

**ஆண்டு பட்டியல் வழக்கு எண். 131/2010**
**CNR NO: TNTJ16-000003-2010**

அரசுக்காக: உதவி ஆய்வாளர்,
திருவையாறு காவல் நிலையம்,
(குற்ற எண். 213/2008). ...குற்றமுறையிடுபவர்

//எதிராக//

1) ஜெயராமன்,
கிராம நிர்வாக அலுவலர்,
மைக்கேல்பட்டி கிராமம்,
திருவையாறு தாலுக்கா.

2) மனோகரன்,
கிராம நிர்வாக அலுவலர்,
திருவையாறு மேற்கு கிராமம்,
திருவையாறு தாலுக்கா.

3) பழனிச்சாமி மூப்பனார், (Died) ...எதிரிகள்

| மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021 நாளிட்ட R.O.C No. 814/2020 RG/F1 (P.Dis.No.36/2021) உத்தரவின்படி CASE SUMMARY கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது. | | | | | |
|---|---|---|---|---|---|
| **S.No.** | **CASE SUMMARY** | | | | |
| (i) | **The Period of remand of the accused fx** | : | **Name of the Accused** | **Date of Remand** | **Release on** |
| | | | 1) Jeyaraman | Anticipatory Bail – 24.10.2008 | |
| | | | 2) Manoharan | | |
| | | | 3) Palanisamy (Died) | | |
| (ii) | **The date of filing of the complaint/final report in the Court** | : | **Filing of Complaint** | **Filing of Final Report** | |
| | | | 25.08.2008 | 18.08.2010 | |
| (iii) | **The date of committal of the** | : | NIL | | |

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.30 21:05:27 +0530

<table>
<tr><td></td><td>case to the Court of Session</td><td></td><td colspan="4"></td></tr>
<tr><td>(iv)</td><td>The date of questioning of the accused U/Sec.228, 240, 246 and 251 of the Code of Criminal Procedure, 1973, as the case maybe</td><td>:</td><td colspan="4">28.03.2026</td></tr>
<tr><td rowspan="2">(v)</td><td rowspan="2">Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts; except routine petitions like petitions U/Sec 317 of the Code</td><td rowspan="2">:</td><td colspan="2">Crl.M.P.No.</td><td>Date of Filing</td><td>Result</td></tr>
<tr><td colspan="2">421/2017<br>u/s 173(8) CrPC</td><td>09.01.2017</td><td>Allowed</td></tr>
<tr><td rowspan="6">(vi)</td><td rowspan="6">Date of examination in-chief and cross-examination of a witness</td><td rowspan="6">:</td><td colspan="2">Name of the Examination</td><td>Date of Chief</td><td>Date of Cross</td></tr>
<tr><td>PW1</td><td>Gopalakrishnan</td><td>07.08.2012,<br>14.12.2016</td><td>07.06.2023,<br>23.06.2023,<br>11.12.2023</td></tr>
<tr><td>PW2</td><td>Mahalingam</td><td>29.01.2019</td><td>29.01.2019</td></tr>
<tr><td>PW3</td><td>Elangovan</td><td>29.01.2019</td><td>29.01.2019</td></tr>
<tr><td>PW4</td><td>Devadoss</td><td>04.10.2024</td><td>04.10.2024</td></tr>
<tr><td>PW5</td><td>Suresh (IO)</td><td>11.07.2025</td><td>11.07.2025</td></tr>
<tr><td>(vii)</td><td>Date of examination of the accused U/Sec 313 of the Code</td><td>:</td><td colspan="4">29.09.2025</td></tr>
<tr><td>(viii)</td><td>Details of abscondence of an accused and his appearance/production, as the case may be; and</td><td>:</td><td colspan="4">Not Applicable.</td></tr>
<tr><td>(ix)</td><td>Grant of stay by</td><td>:</td><td colspan="2">Sessions Court</td><td>High Court No and</td><td>Result</td></tr>
</table>

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.30 21:05:38 +0530

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **superior Courts and the results thereof** | | **CMP Numbers** | **Date of Stay** | |
| | | | NIL | | |

| | | |
|---|---|---|
| 1–வது குற்றச்சாட்டு | | புகார்தாரருக்குச் சொந்தமான திருவையாறு நஞ்சை புல எண். 195/2ஏ நிலம் தொடர்பாக 3–வது எதிரி பெயரில் பொய்யாக சான்று வழங்கியதற்காக 1, 2 எதிரிகள் மீது இதச.பிரிவு.197–ன் கீழ் |
| 2–வது குற்றச்சாட்டு | : | புகார்தாரரை ஏமாற்றும் நோக்கத்தில், 3–வது எதிரி பெயரில் பொய்யான வருவாய்த் துறை ஆவணங்களை ஏற்படுத்திக் கொடுத்ததற்காக 1, 2 எதிரிகள் மீது இதச.பிரிவு.468–ன் கீழ் |
| 3–வது குற்றச்சாட்டு | | புகார்தாரரை ஏமாற்றுவதற்காக புகார்தாரரின் நிலம் தொடர்பாக 3–வது எதிரி பெயரில் வருவாய் ஆவணம் ஏற்படுத்த கூட்டு சதி செய்ததற்காக 1, 2 எதிரிகள் மீது இதச.பிரிவு.120பி–ன் கீழ் |
| எதிரிகளின் பதில் | : | குற்றவாளிகள் அல்ல. |
| நீதிபதியின் தீர்மானம் | : | குற்றவாளிகள் இல்லை என முடிவு. |
| உத்தரவு (அ) தண்டணை | : | 1). 3–வது எதிரிக்கு எதிரான வழக்கு அற்றுப் போய்விட்டது. 1, 2 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள். 197, 468 மற்றும் 120பின்–கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து, 1, 2 எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என தீர்மானிக்கப்பட்டு, கு.வி.மு.ச.பிரிவு.248(1)–ன் கீழ் 1, 2 எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கப்படுகிறது.<br>2). இவ்வழக்கில் எதிரிகள் தரப்பில் எழுதிக்கொடுக்கப்பட்ட பிணையப் பத்திரங்கள் மேல்முறையீடு காலத்திற்கு பின்னர் ரத்தாகிவிடும் |

| | | |
|---|---|---|
| | | என்று உத்தரவிடப்படுகிறது.<br>3). புலன் விசாரணை அதிகாரியால் ஒப்படைக்கப்பட்டு, நீதிமன்றத்தில் சி.பி எண்.202/2010-ல் ஒப்படைக்கப்பட்ட ஆவணங்களில் அசல் ஆவணங்களை மேல் முறையீட்டுக்காலத்திற்கு பிறகு புகார்தாரருக்கு ஒப்படக்க வேண்டும் என்றும், நகல் ஆவணங்களை மேல் முறையீட்டு காலத்திற்கு பின்னர் அழித்துவிட வேண்டும் என்று உத்தரவிப்படுகிறது. |

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் கடந்த 18.08.2010-ம் தேதி ஆண்டுபட்டிகை வழக்கு எண்.131/2010 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இதுநாள் வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து, கடந்த 23.10.2025-ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் இரண்டாம் நிலை அரசு உதவி வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 1-வது எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.M. ராஜ், M.A., B.L., அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A. சுப்ரமணியன்., M.A., B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பினரும் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று வரை என் ஆய்வில் வைத்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்...

## தீர்ப்புரை

1, 2 எதிரிகளுக்கு எதிராக இ.த.ச.பிரிவுகள் 197, 198, 466, 468 மற்றும் 120பி-ன் கீழ் திருவையாறு காவல் நிலைய உதவி ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.30 21:05:44 +0530

**1. கு.வி.மு.ச.பிரிவு.173–ன் கீழ் தாக்கலான குற்ற இறுதி அறிக்கையின்படி வழக்கின் சுருக்கம்:–**

புகார்தாரருக்கு சொந்தமான, 3.91 ஏக்கர் விஸ்தீரணம் உள்ள திருவையாறு மேற்கு கிராம நஞ்சை புல எண். 195/2 ஏ, நிலம் தொடர்பாக, எதிரிகள் மூவரும் கூட்டாக சதித் திட்டம் தீட்டி, 3–வது எதிரிக்கு சாதகமாக வருவாய்த் துறை ஆவணங்களை தயார் செய்தும், 1, 2 எதிரிகள் அதில் கையெழுத்திட்டு அதை உண்மையான ஆவணமாக பயன்படுத்துவதற்கு 3–வது எதிரிக்கு சாதகமாக பொய்யான ஆவணத்தை வழங்கியும், இ.த.ச.பிரிவுகள் 197, 198, 466, 468 மற்றும் 120–ன் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய குற்றம் இழைத்துள்ளனர் என்று திருவையாறு காவல் நிலைய ஆய்வாளர் கு.வி.மு.ச பிரிவு 173–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2.** எதிரிகளுக்கு கு.வி.மு.ச. பிரிவு. 204–ன் கீழ் அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன், கு.வி.மு.ச. பிரிவு. 207–ன் கீழ் வழக்காவணங்கள் இலவசமாக வழங்கப்பட்டன. பின்னர் ஆவணங்களை பரிசீலித்தும், இருதரப்பின் வாதங்களை கேட்டும், எதிரிகள் மீது குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு, எதிரிகளுக்கு எடுத்து கூறி விளக்கி வினவியபோது, எதிரிகள் குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளனர். இவ்வழக்கின் 3வது எதிரி இறந்து விட்டதால் அவர் மீதான குற்றச்சாட்டுகள் அற்றுப் போய்விட்டது. எனவே, அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. வழக்கு விசாரணைக்குப் பின்னர் 1, 2 எதிரிகளுக்கு எதிராக இதச பிரிவுகள் 197, 468, 120பி–ன்கீழ் குற்றச்சாட்டுகள் மீண்டும் வனையப்பட்டு, எதிரிகளிடம் விளக்கி வினவியபோது, எதிரிகள் குற்றச்சாட்டை மறுத்தனர்.

3. அரசுதரப்பு வழக்கை நிரூபிப்பதற்காக அரசுதரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.5** வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.14** வரையிலான சான்றாவணங்களும், எதிர்மனுதாரர் தரப்பில் **எ.ம.சா.ஆ.1** முதல்

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.30 21:05:50 +0530

**எ.ம.சா.ஆ.6** வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டன.

**<u>4. அரசுத்தரப்பு சாட்சியங்களின் படி வழக்கின் சுருக்கம்:–</u>**

புகார்தாரர் திருச்சியில் வசித்து வருகிறார். திருவையாறு மேற்கு விளாங்குடி சாலையில் உள்ள புல எண்.195/2–ல் 3.91 ஏக்கர் நிலம் புகார்தாரரின் தாயார் அமிர்தலெட்சுமி என்பவர் பெயரில் ஏற்பட்டு புகார்தாரருக்கு சொந்தமாக நிலம் உள்ளது. அது 1991–ல் நீதிமன்றத்தில் ஏலம் மூலமாக சுவாதீனம் எடுத்து பெறப்பட்ட சொத்து. 3–வது எதிரி திருவையாறு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.379/89 என்ற வழக்கினை புகார்தாரர் தாயார் மற்றும் கோவிந்தராஜ் நாயுடு ஆகியோர் பெயரில் உறுத்துக் கட்டளை வேண்டி தாக்கல் செய்து, அது தள்ளுபடியானதன்பேரில் மேற்முறையீடு ஒன்றை 3வது எதிரி 1991–ல் தாக்கல் செய்து அதுவும் தள்ளுபடி செய்யப்பட்டது. 2–வது மேல் முறையீடு சென்னை உயர் நீதிமன்றத்தில் S.A.No.295/23–ல் 3–வது எதிரி தாக்கல் செய்து, மேற்படி சொத்தில் 3 வது எதிரி குத்தகைதாரர் அல்ல என்ற வகையில் தள்ளுபடி செய்யப்பட்டது. பின்னர் 3–வது எதிரி திருவையாறு வட்டாட்சியர் வசம் மனு செய்து அந்த மனுவும் தள்ளுபடி ஆகிவிட்டது. தஞ்சாவூர் வருவாய் கோட்ட அலுவலர் வசம் மனு செய்து அதுவும் தள்ளுபடி செய்யப்பட்டது. மேற்படி சொத்தை புகார்தாரரின் தாயார் புகார்தாரரின் பெயருக்கு 27.01.2006–ஆம் தேதியில் தான செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார். 3–வது எதிரி 1, 2 எதிரிகளிடமிருந்து போலியாக அந்த நிலத்தில் தான்தான் குத்தகை செய்வதாக சொல்லி சான்றிதழ் பெற்றுள்ளார். அந்த சான்றிதழ் பொறுத்து விசாரணை செய்ய வேண்டி திருவையாறு காவல் நிலையத்தில் விசாரணைக்காக வேண்டி, சான்றிதழ்கள் அனுப்பப்பட்டு, புகார்தாரரையும் அந்த விசாரணைக்காக அழைத்தனர். வருவாய் கோட்ட அலுவலரின் விசாரணையில், புகார்தாரர் தான் குத்தகைதாரர் என்று முடிவு செய்யப்பட்டது. புகார்தாரர் சுவாதீனத்தில் உள்ள நிலத்தை அபகரிக்கும்

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.30 21:05:57 +0530

நோக்கத்தில் செயல்பட்ட எதிரிகளின் மீது, புகார்தாரர் திருவையாறு காவல் நிலையத்தில் புகார் செய்ததன்பேரில் நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் புகார்தாரர் நீதிமன்றத்தில் புகார்– அ.சா.ஆ.1. செய்ததன்பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

கடந்த 25.08.2008–ஆம் ஆண்டு உதவி ஆய்வாளர் தேவதாஸ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு என்பவரால் பதியப்பட்டு, அ.சா.5–ன் பார்வைக்கு வைக்கப்பட்ட வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட ஆய்வாளர் ரவி, புகார்தாரரால் ஒப்படைக்கப்பட்ட ஆவணங்கள் பொறுத்த மெய்தன்மை அறிய வட்டாச்சியருக்கு கடிதம் அனுப்பியுள்ளார், வழக்கினை தொடர் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட ஆய்வாளர் சிவக்குமார் ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட குற்ற எண்.192/2008 சட்டப் பிரிவு 145 Crpc வழக்குப்பற்றி வருவாய் கோட்டாச்சியருக்கு கடிதம் அனுப்பியுள்ளார். 30.06.2009–ஆம் தேதி இவ்வழக்கின் சாட்சிகளான கோபலாகிருஷ்ணன் மற்றும் தங்கவேல் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, 15.07.2009–ஆம் தேதி வழக்கு தொடர்பான ஆவணங்களை மகாலிங்கம், இளங்கோவன் ஆகிய சாட்சிகள் முன்னிலையில், புகார்தாரரிடம் இருந்து கைப்பற்றுதல் மகஜர்– அ.சா.ஆ.13–ல் கைப்பற்றி, மகஜர் சாட்சிகளையும் ஆய்வாளர் ரவி, மற்றும் சிவக்குமார் ஆகியோர்களையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். வழக்கின் எதிரிகள் முன்பிணை பெற்றுவிட்டார்கள் என தெரிந்துகொண்டு, வழக்கின் புலன் விசாரணை முடித்து 20.06.2010–ஆம் தேதி எதிரிக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்தார்.

**5.** அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து 1, 2 எதிரிகளுக்கு பாதகமாக உள்ள சாட்சியங்கள் குறித்து, கு.வி.மு.ச.பிரிவு.313(1)(ஆ)–ன் கீழ் 1, 2 எதிரிகளிடம் வினவியபோது, 1, 2 எதிரிகள் அவற்றை பொய்சாட்சி என்றும்,

AGNES JEBA KIRUBA S Digitally signed by AGNES JEBA KIRUBA S Date: 2026.03.30 21:06:03 +0530

பொய்வழக்கு என்றும் பதில் கூறினார். 1, 2 எதிரிகளின் பதில் பதிவு செய்யப்பட்டன. 1, 2 எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டு என்று கூறினபோதும், 1, 2 எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. 1, 2 எதிரிகள் தரப்பு சாட்சி விசாரணை முடிக்கப்பட்டது.

**6. இருதரப்பு வாதத்தின் சுருக்கம்:-**

உரிமையியல் நீதிமன்றங்களால் 3-வது எதிரி திருவையாறு புல எண் 195/2ஏ நிலத்தில் அனுபவத்தில் இல்லை என தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், மேற்படி சங்கதி தெரிந்து கொண்டே, 1, 2 எதிரிகள் 3-வது எதிரியுடன் கூட்டு சதி செய்து, புகார்தாரருக்குச் சொந்தமான மேற்படி சொத்து தொடர்பாக 3-வது எதிரி பெயருக்கு வருவாய் ஆவணம் ஏற்படுத்தியும், அதை உண்மையான ஆவணம்போல பயன்படுத்தியும் உள்ளதன் மூலம், இதச பிரிவுகள், 197, 198, 467, 468, 120பி-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் எதிரிகளின் குற்ற செய்கை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், எதிரிகள் தரப்பில் மேற்கோள் காட்டப்பட்ட சந்தேகங்கள் வழக்கினை பாதிக்கவில்லை என்றும், எதிரிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்குமாறும் அரசு தரப்பில் வாதம் செய்யப்பட்டது.

எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எழுத்துப்பூர்வ வாதுரையில், எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றும், புலன் விசாரணை அதிகாரி வழக்கினை உரிய முறையில் புலன் விசாரணை செய்யவில்லை என்றும், இந்த வழக்கில் சொல்லப்பட்ட நிலம் தொடர்பாக இந்த புகார்தாரர் மீதும், வேறு சிலர் மீதும் புகார்தாரரின் சகோதரர் சேதுராமன் என்பவர் திருச்சி கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றத்தில் பாகம் கோரி 24.04.2008 ஆம் தேதி தாக்கல் செய்துள்ளார் என்றும், அந்த வழக்கு நிலுவையில் இருக்கும்

AGNES JEBA KIRUBA S Digitally signed by AGNES JEBA KIRUBA S Date: 2026.03.30 21:06:09 +0530

போதே புகார்தாரர் இந்த வழக்கின் புகாரை கொடுத்துள்ளார் என்றும், விசாரணை செய்ததில், 3–வது எதிரி மேற்படி நிலத்தில் சாகுபடி செய்ததை தெரிந்து கொண்டுதான் , 1, 2 எதிரிகள் முறையே 05.07.2006 மற்றும் 07.07.2008 ஆகிய தேதிகளில் 3–வது எதிரி பெயரில் அனுபவ சான்று வழங்கியுள்ளனர் என்றும், மேற்படி அனுபவ சான்றை விசாரணையின் அடிப்படையில் வழங்க 1, 2 எதிரிகளுக்கு உரிமை உள்ளது என திருவையாறு வட்டாட்சியர் கடிதமும் கொடுத்துள்ளார் என்றும், 1, 2 எதிரிகளால் வழங்கப்பட்டதாக சொல்லும் அனுபவ சான்றுகளின் அசல் வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை, என்றும், வட்டாட்சியருக்கு புலன் விசாரணை அதிகாரியால் 24.03.2009 ஆம் தேதி மேற்படி ஆவணம் குறித்து கேள்வி கேட்கப்பட்ட நிலையில், ந.க.எண்.9227/2008/அ4/22.06.2009–ம் தேதி மேற்படி ஆவணங்கள் போலியானது அல்ல என்று கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி வட்டாட்சியர் வழக்கில் சாட்சியாக சேர்க்கப்படவில்லை என்றும், இந்த வழக்கு தொடர்பாக அரசு வழக்கறிஞரிடம் பெறப்பட்ட சட்டக் கருத்துரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், எதிரிகள் மீது சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், சந்தேகங்களின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை விடுதலை செய்யுமாறு சொல்லப்பட்டுள்ளது.

**7. இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில்,**

(i) 1, 2 எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச. பிரிவுகள் 197 468 மற்றும் 120பி–ன் படியான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா?

(ii) 1, 2 எதிரிகளுக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனை என்ன? என்பதேயாகும்.

AGNES JEBA KIRUBA S Digitally signed by AGNES JEBA KIRUBA S Date: 2026.03.30 21:06:15 +0530

**8. தீர்வு:–**

புகார்தாரருக்குச் சொந்தமான புல எண். 195/2ஏ நிலத்தில் 3–வது எதிரி சாகுபடி செய்வதாக, 3–வது எதிரியுடன் கூட்டு சதி செய்து 1, 2 எதிரிகள் பொய்யாக வருவாய் ஆவணம் தயார் செய்து வழங்கியதாகவும், அந்த ஆவணத்தை எதிரிகள் உண்மைபோல் பயன்படுத்தியதாக இதச 197, 198, 466, 468, 120பி–ன்கீழ் எதிரிகளுக்கு எதிராக அரசு தரப்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, 3–வது எதிரி இறந்துவிட்ட நிலையில், 1, 2 எதிரிகளுக்கு எதிராக இ.த.ச 197, 468, 120பி–ன்கீழ் நீதிமன்றத்தால் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் புகார்தாரரால் குவிமுச பிரிவு 156(3)–ன்கீழ் சி.ஆர்.எம்.பி 4226/2008 மனு தாக்கல் செய்யப்பட்டு, அதில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்பேரில் கு.எண்.213/2008–ல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, புலன் விசாரணை அதிகாரியால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 07.07.2008–ஆம் தேதி வழக்கு சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்பட்டு, 30.07.2008–ஆம் தேதி நீதிமன்றத்தால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய உத்தரவிடப்பட்டு, 25.08.2008–ஆம் தேதி 22.30 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, 26.08.2008–ஆம் தேதி காலை 10.50 மணிக்கு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கின் புலன் விசாரணை 20.06.2010–ஆம் தேதி முடிவுற்று, குற்ற இறுதி அறிக்கை 11.08.2010–ம் தேதி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் புகார்தாரர் அ.சா.1–ஆகவும், பார்வை மகஜர் சாட்சிகள் அ.சா.2, 3–ஆகவும், புலன் விசாரணை அதிகாரிகள் அ.சா.4 மற்றும் 5–ஆகவும் அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ளனர். மற்ற பட்டியல் சாட்சியல் யாரும்

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.30 21:06:19 +0530

விசாரணை செய்யப்படவில்லை.

புகார்தாரர் தாக்கல் செய்த கு.வி.மு.ச பிரிவு 156(3) ன் கீழானா புகார்மனு – அ.சா.ஆ.1–ல், புகார்தாரரின் தாயார் கடந்த 22.04.1990–ஆம் தேதி தஞ்சாவூர் சார்பு நீதிமன்ற நிறைவேற்று மனு எண்.119/1991–ல் திருவையாறு நஞ்சை புல எண் 195/2ஏ 3.91 ஏக்கர் நிலத்தை, நீதிமன்ற ஏலத்தில் எடுத்து அனுபவம் செய்து வந்துள்ளார் என்றும், 3–வது எதிரி புகார்தாரரின் தாயார் மற்றும் கோவிந்தராஜு நாயுடு ஆகியோர் மீது, மேற்படி நிலத்தில் 3–வது எதிரி தான் குத்தகை சாகுபடி செய்வதாக சொல்லி அசல் வழக்கு எண் 379/89 தாக்கல் செய்துள்ளார் என்றும், அந்த வழக்கு தள்ளுபடியானதை எதிர்த்து, மேல்முறையீடு வழக்கு எண்.58/99 தாக்கல் செய்து, அது தள்ளுபடியான பிறகு, 2–வது மேல்முறையீட்டு எண்.295/1993–ல் தாக்கல் செய்து, அதுவும் தள்ளுபடியாகி உள்ளது என்றும், வட்டாட்சியரிடம் தனது பெயரை மேற்படி நிலத்திற்கான குத்தகைதாரர் என்று சேர்க்க சொல்லி 3 வது எதிரி மனு எண் 53/89 தாக்கல் செய்து, அந்த மனு 05.07.1997–இல் தள்ளுபடியாகி உள்ளது என்றும், 27.01.2006–ஆம் தேதி புகார்தாரரின் தாயார் மேற்படி நிலத்தை புகார்தாரருக்கு பதிவு செய்யப்பட்ட தான செட்டில்மெண்ட் மூலம், புகார்தாரர்க்கு பாத்தியப்படுத்தியுள்ளார் என்றும், மேற்படி தான செட்டில்மெண்ட்டின்படி புகார்தாரர் மேற்படி சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்றும், 2–வது எதிரிக்கு மேற்படி நிலம் தொடர்பாக எந்த சான்றும் வழங்க வேண்டாம் என புகார்தாரர் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதை 2–வது எதிரி பெறாமல் மறுத்துவிட்டு, 07.07.2008–ம் தேதி 1417 பசலியில், மேற்படி நிலத்தில், 3–வது எதிரி குத்தகை சாகுபடி செய்வதாக பொய் சான்றிதழ் வழங்கியுள்ளார் என்றும், 1–வது எதிரி 1415 பசலியில், மேற்படி நிலத்தில், 3–வது எதிரி குத்தகை சாகுபடி செய்வதாக ஒரு பொய் சான்றிதழ் வழங்கியுள்ளார் என்றும், மேற்படி செய்கை தொடர்பாக புகார்தாரர் காவல் நிலையத்தில் புகார் அளித்து, மாவட்ட கண்காணிப்பாளர் அவர்களிடமும் புகார்

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.30 21:06:25 +0530

கொடுத்து நடவடிக்கை எடுக்கப்படாததால், நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ததாக சொல்லப்பட்டுள்ளது.

மேற்படி புகாரின் மூலம் 1, 2 எதிரிகள் 3–வது எதிரி புகார்தாரரின் நிலத்தில் சாகுபடி செய்து வருவதாக சான்று வழங்கினார்கள் என்றும், அது பொய் சான்று என்றும், சொல்லப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது. புகார்தாரர் பொய்யான சான்று என்று சொல்லும், மேற்படி 1, 2 எதிரிகள் வழங்கிய சான்றுகள் இவ்வழக்கில் அரசு தரப்பில் கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவில்லை. சான்றாவணமாக குறியீடு செய்யப்படவில்லை. புகார் மனுவுடன் மேற்படி சான்றை தாக்கல் செய்ததாக புகார் மனுவில் சொல்லப்பட்டுள்ள நிலையில், மேற்படி சான்றுகள் தொடர்பாக புலன் விசாரணை அதிகாரி எவ்வித விசாரணையும் மேற்கொண்டு அறிக்கையில் குறிப்பிடவில்லை.

புகார்தாரர் தரப்பில் அசல் வழக்கு எண்.379/1989–ன் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை, மேல்முறையீட்டு வழக்கு எண்.58/1991–ன் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை, 2–வது மேல்முறையீட்டு வழக்கு எண்.295/1993ன் தீர்ப்பாணை, 1415, 1416 பசலிக்கான அடங்கல், 1417–க்கான அடங்கல், 14.08.1989 தேதிய ஏலச்சான்று, 27.01.2006 தேதிய புகார்தாரர் பெயரிலான செட்டில்மெண்ட் பத்திரம் ஆகியவை முறையே அ.சா.ஆ.2 முதல் 6 மற்றும், அ.சா.ஆ.9, 10–ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மேற்படி ஆவணங்களின் மூலம், புகார்தாரர் புல எண்.192/2ஏ சொத்தினை செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் பெற்றுள்ளார் என்பது தெரியவருகிறது. இந்த வழக்கில் 1, 2 எதிரிகள், 3–வது எதிரி மேற்படி சொத்தில் குத்தகை சாகுபடி செய்து வருவதாக சான்று வழங்கினர் என்று சொல்லப்பட்ட நிலையில், 1, 2 எதிரிகள் பொய்யான சான்று வழங்கினார்களா? இல்லையா? என்பது மட்டுமே இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியதாகும்.

அ.சாஆ–2– அ.வ.எண்.379/1989 வழக்கினை பரிசீலிக்கும்போது, தனது சுவாதீனத்தில் உள்ள சொத்திற்கு இடையூறு செய்யக்கூடாது என 3–வது எதிரி

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.30 21:06:31 +0530

வழக்கு தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது. அந்த வழக்கிலோ, மேல் முறையீடுகளிலோ புகார்தாரர் தரப்பில் எவ்வித எதிர்பாத்திய கோரிக்கையும் தாக்கல் செய்ததாக அறியமுடியவில்லை. 1, 2 எதிரிகள் கிராம நிர்வாக அலுவலர்களாக உள்ள நிலையில், தரப்பினர்களுக்கிடையே நடந்த வழக்கு குறித்து 1, 2 எதிரிகளுக்கு தெரியவந்தும், அவர்கள் 3–வது எதிரிக்கு ஆதரவாக சான்று வழங்கினார்களா? இல்லையா? என்பது இவ்வழக்கில் ஆராயப்பட வேண்டியதாகும். புகார்தாரர் தரப்பில், மேற்படி சொத்து குறித்து எந்த சான்றும் வழங்கக்கூடாது என 2–வது எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும், அந்த அறிவிப்பினை 2–வது எதிரி வேண்டுமென்றே வாங்க மறுத்துவிட்டார் என்றும், வழக்கில் சொல்லப்பட்டுள்ளது. அரசு தரப்பில் திருப்பப்பட்ட அஞ்சல் உறை– அ.சா.ஆ.12–ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த அஞ்சல் உறையை பரிசீலிக்கும்போது அது மறுக்கப்பட்டதாக குறிப்பிடப்படவில்லை. எனவே வேண்டுமென்றே கூட்டு சதி செய்து, அறிவிப்பை வாங்க மறுத்து, 3–வது எதிரிக்கு ஆதரவாக பொய் ஆவணம் கொடுத்ததாக சொல்லப்படும் குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை. 1, 2 எதிரிகள் வழங்கியதாக சொல்லும் ஆவணங்களும், அரசு தரப்பில் குறியீடு செய்யப்படவில்லை. மிக முக்கியமாக, வழக்கு விசாரணை துவங்கிய பிறகு, புகார்தாரர் தரப்பல் குவிமுச பிரிவு 173–ன்கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, கூடுதல் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதும் இந்நீதிமன்றத்தால் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படுகிறது.

1, 2 எதிரிகள் கொடுத்ததாக சொல்லப்படும் பொய்யான ஆவணம் புகார்தாரருக்கு எவ்வாறு கிடைத்தது என்று புகாரில் சொல்லப்படவில்லை. புகார்தாரர் அ.சா.1–ஆக அளித்துள்ள சாட்சியத்தில், காவல் நிலையத்தில் மேற்படி சான்றை வைத்து 3–வது எதிரி புகார் கொடுத்ததாகவும், அந்த புகாரின் மீதான விசாரணைக்கு தான் சென்றதாகவும், அப்போது, போலீசாரால் அந்த ஆவணம்

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.30 21:06:36 +0530

காண்பிக்கப்பட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி புகார் மற்றும் விசாரணை தொடர்பாக இந்த வழக்கின் புகாரில் புகார்தாரர் சொல்லவில்லை. புலன் விசாரணை அதிகாரி அ.சா.5 தனது சாட்சியத்தில் ஏற்கெனவே பதிவு செய்யப்பட்ட குற்ற எண்.192/2008 சட்டப்பிரிவு 145 Crpc கீழானா வழக்குபற்றி வருவாய் ஆய்வாளருக்கு கடிதம் அனுப்பியதாக சாட்சியம் அளித்துள்ளார். அந்த வழக்கின் நகல் எதுவும் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை, அதற்கான காரணமும் வழக்கு கோப்பில் சொல்லப்படவில்லை.

எந்த ஆவணம் பொய்யாக தயார் செய்யப்பட்டது என்று, அரசு தரப்பு வழக்கில் சொல்லப்பட்டதோ, அந்த ஆவணமே வழக்கில் தாக்கல் செய்யப்படாத நிலையில், இதச பிரிவுகள் 197, 468–ன் கீழான குற்ற செய்கை நிரூபிக்கப்பட்டதாக எடுத்துக்கொள்ள முடியாது. மேலும், 3–வது எதிரியுடன் கூட்டு சதி செய்து 1, 2 எதிரிகள் மேற்படி ஆவணத்தை தயார் செய்ததாக சொல்லப்பட்ட இந்த வழக்கில் அது தொடர்பாக எந்த சாட்சியமும் முன்னிலைப் படுத்தப்படவில்லை. கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகளாக முன்னிலைப் படுத்தப்பட்ட அ.சா.2 மற்றும் 3 புகார்தாரரிடமிருந்து புலன் விசாரணை அதிகாரி ஆவணங்களை பெற்றது குறித்து மட்டும் சாட்சியம் அளித்துள்ளனர். புலன் விசாரணை அதிகாரி அ.சா.4 தனது குறுக்கு விசாரணையில், தரப்பினர்களின் சிவில் வழக்கு தொடர்பாக விசாரணை செய்யவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். சிவில் வழக்கு முடிந்த பிறகு பொய் ஆவணம் தயாரித்ததாகதான் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்ட நிலையில், சிவில் வழக்கு தொடர்பாக விசாரணை செய்யப்படவில்லை என்று புலன் விசாரணை அதிகாரி சாட்சியம் அளித்துள்ளது இவ்வழக்கு உரிய முறையில் புலன் விசாரணை செய்யப்படவில்லை என்பதை காட்டுகிறது.

மிக முக்கியமாக, காவல் துறையில் இருந்து 1, 2 எதிரிகள் வழங்கியதாக சொல்லும் பொய் ஆவணம் தொடர்பாக வட்டாட்சியருக்கு கடிதம்

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.30 21:06:41 +0530

அனுப்பப்பட்டது என்றும், அந்த கடிதத்திற்கு, வட்டாட்சியரிடமிருந்து பதில் பெறப்பட்டது என்றும், அந்த பதிலில் 1416, 1417 பசலி வருடத்தில் 3-வது எதிரி சாகுபடி செய்து அனுபவம் செய்து வந்ததாக தெரியவருகிறது என்றும் குறிப்பிட்டுள்ளதாக எதிரி தரப்பில் அ.சா.5 புலண் விசாரணை அதிகாரியிடம் கேள்வி கேட்கப்பட்டு, அது புலன் விசாரணை அதிகாரியால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி ஆவணம் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும், 18.08.2009-ஆம் தேதி இந்த வழக்கு தாக்கல் செய்வது குறித்து அரசு வழக்கறிஞரிடம் கருத்துரை பெறப்பட்டது என்றும், அந்த கருத்துரையில் குற்ற வழக்கு தொடரமுடியாது என சொல்லப்பட்டுள்ளது என அ.சா.5- புலன் விசாரணை அதிகாரி ஒப்புக்கொண்டுள்ளார். மேற்படி ஆவணமும் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை. இந்த வழக்கின் அடிப்படையான நிலத்தில் சாகுபடி செய்யும் நபர் பொறுத்து வழங்கப்பட்ட சான்றின் உண்மைத்தன்மை குறித்து விசாரித்து தெரிந்துகொண்டதாக புலண் விசாரணை அதிகாரி அ.சா.5 ன் சாட்சியத்தின் மூலம் தெரிய வரும் நிலையில், அது குறித்து புலன் விசாரணை அதிகாரி வழக்கில் தெளிவுபடுத்தவில்லை அந்த ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. அவை வழககினை முழுவதுமாக பாதிக்கிறது என இந்நீதிமன்றம் கருதுகின்றது. எதிரிகள் தரப்பில், புகார்தாரரின் சகோதரர் சேதுராமன் என்பவ்ர புகார்தாரர் மற்றும் சிலர் மீது இந்த வழக்கில் கண்ட சொத்து தொடர்பாக பாக பரிகாரம் கோரி அ.வ.எண்.85/2008 வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ள நிலையில் புகார்தாரரால் இந்த புகார் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று செய்யப்பட்ட வாதமும், மேற்சொன் பாக வழக்கு தொடர்பாக எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எ.சா.ஆ.1 & 2- அ.வ.எண்.85/2008 வழக்கின் மனு மற்றும் தீர்ப்பாணை சான்றிட்ட நகல் ஆவணங்களும் பரிசீலிக்கப்பட்டு, அந்த வழக்கு நிலுவையில் இருப்பது குறித்து புகார்தாரர் தனது சாட்சியத்தில் ஒப்புக்கொண்டுள்ளது இந்நீதிமன்றத்தால்

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.30 21:06:46 +0530

கவணத்தில் எடுத்துக்கொள்ளப்படுகிறது. மேலும், எ.சா.ஆ.3 – கிரயபத்திரம் மூலம் சொத்தை புகார்தாரர் பாக வழக்கு நிலுவையில் இருக்கும்போதே செட்டில்மெண்டு ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட சொத்தின் மதிப்பை விட குறைந்த மதிப்பு காண்பித்து சொத்தைவிற்று உள்ளார் என்றும், சொத்தை விற்பனை செய்துவிட்டு உரிமையில்லாத சொத்து தொடர்பாக புகார் கொடுத்துள்ளார் என்றும் எதிரிகள் தரப்பில் செய்யப்பட்ட வாதமும் இந்நீதிமன்றத்தால் இவ்வழக்கினை தீர்மாணிக்க கருத்தில் எடுத்துக்கொள்ளபடுகிறது.

மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில், 1, 2 எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள இதச பரிவுகள் 197, 468, 120பி–ன் கீழான குற்றச்சாட்டைப் பொறுத்தவரையில், அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதி, மேற்கண்ட சந்தேகங்களின் பலனை எதிரிகளுக்கு அளித்து, எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என்று கு.வி.மு.ச.பிரிவு.248(1)–ன் கீழ் இந்நீதிமன்றம் தீர்மானித்து, எதிரிகள் விடுதலை செய்யப்பட வேண்டுமென்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

புலன் விசாரணை அதிகாரியால் ஒப்படைக்கப்பட்டு, நீதிமன்றத்தில் சி.பி. எண்.202/2010–ல் ஒப்படைக்கப்பட்ட ஆவணங்களில் அசல் ஆவணங்களை மேல் முறையீட்டுக் காலத்திற்கு பிறகு புகார்தாரருக்கு ஒப்படைக்க வேண்டும் என்றும், நகல் ஆவணங்களை மேல் முறையீட்டு காலத்திற்கு பின்னர் அழித்துவிட வேண்டும் என்று உத்தரவிடுவது நீதியின்பால் உகந்தது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**9. முடிவாக,**

1). 3–வது எதிரிக்கு எதிரான வழக்கு அற்றுப்போய்விட்டது. 1, 2 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள். 197, 468 மற்றும் 120பின்–கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.30 21:06:51 +0530

என இந்நீதிமன்றம் முடிவு செய்து, 1, 2 எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என தீர்மானிக்கப்பட்டு, கு.வி.மு.ச.பிரிவு.248(1)–ன் கீழ் 1, 2 எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கப்படுகிறது.

2). இவ்வழக்கில் எதிரிகள் தரப்பில் எழுதிக்கொடுக்கப்பட்ட பிணையப் பத்திரங்கள் மேல்முறையீடு காலத்திற்கு பின்னர் ரத்தாகிவிடும் என்று உத்தரவிடப்படுகிறது.

3). புலன் விசாரணை அதிகாரியால் ஒப்படைக்கப்பட்டு, நீதிமன்றத்தில் சி.பி எண்.202/2010–ல் ஒப்படைக்கப்பட்ட ஆவணங்களில் அசல் ஆவணங்களை மேல் முறையீட்டுக்காலத்திற்கு பிறகு புகார்தாரருக்கு ஒப்படைக்க வேண்டும் என்றும், நகல் ஆவணங்களை மேல் முறையீட்டு காலத்திற்கு பின்னர் அழித்துவிட வேண்டும் என்று உத்தரவிப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று **2026**–ம் ஆண்டு **மார்ச்** மாதம் **30–ம்** நாள் என்னால் அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

AGNES JEBA KIRUBA S Digitally signed by AGNES JEBA KIRUBA S Date: 2026.03.30 21:06:59 +0530

நீதித்துறை நடுவர்,

திருவையாறு.

**அரசுத்தரப்பு சாட்சிகள் :–**

| | |
|---|---|
| அ.சா.1 | கோபால கிருஷ்ணன் (புகார்தாரர்) |
| அ.சா.2 | மகாலிங்கம் |
| அ.சா.3 | இளங்கோவன் |

| | |
|---|---|
| அ.சா.4 | தேவதாஸ், காவல் ஆய்வாளர் |
| அ.சா.5 | சுரேஷ் (புலன் விசாரணை அதிகாரி) |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:–</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | – | மனுதாரர் தாக்கல் செய்த 156(3) மனு |
| அ.சா.ஆ.2 | 15.04.1991 | அ.வ.எண்.379/89–ன் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் |
| அ.சா.ஆ.3 | 16.11.1992 | மேல்முறையீடு 58/91 வழக்கின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை சான்றிட்ட நகல் |
| அ.சா.ஆ.4 | 28.08.2003 | S.A No.295/93 வழக்கில் சென்னை உயர் நீதிமன்றம் வழங்கிய உத்தரவின் சான்றிட்ட நகல் |
| அ.சா.ஆ.5 | 07.07.2010 | பசலி 1415, 1416–க்கான அடங்கல் சான்று |
| அ.சா.ஆ.6 | 05.09.2010 | பசலி 1417–க்கான அடங்கல் சான்று |
| அ.சா.ஆ.7 | 08.07.2008 | காவல் துறை ஆய்வாளருக்கு அனுப்பிய புகாரின் அலுவலக நகல் |
| அ.சா.ஆ.8 | 08.07.2008 | காவல்துறை கண்காணிப்பாளருக்கு அனுப்பப்பட்ட புகார் அலுவலக நகல் |
| அ.சா.ஆ.9 | 14.08.1989 | 14.08.1989 அன்று தஞ்சாவூர் சார்பு நீதிமன்றம் வழங்கிய ஏலச்சான்று அசல் |
| அ.சா.ஆ.10 | 27.01.2006 | கோபாலகிருஷ்ணனுக்கு அமிர்தலெட்சுமி எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் சான்றிட்ட நகல் |
| அ.சா.ஆ.11 | 19.06.2008 | 2–ஆம் எதிரி மனோகரனுக்கு கோபாலகிருஷ்ணன் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் |
| அ.சா.ஆ.12 | 25.06.2008 | திருப்பி அனுப்பப்பட்ட அஞ்சல் உறை அசல் |
| அ.சா.ஆ.13 | 15.07.2009 | கைப்பற்றுதல் மகஜர் அசல் |
| அ.சா.ஆ.14 | 25.08.2008 | முதல் தகவல் அறிக்கை அசல் |

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.30 21:07:05 +0530

**எதிரி தரப்பு சாட்சிகள்:** இல்லை

**எதிரி தரப்பு சான்றாவணங்கள்:-**

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | - | அ.வ.எண்.85/2008 வழக்கில் தஞ்சாவூர் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.2 | 06.04.2010 | அ.வ.எண்.85/2008 வழக்கின் தீர்ப்பாணை சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.3 | 28.07.2011 | கிரய பத்திரம் சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.4 | 28.02.2013 | வக்காலத்து |
| எ.ம.சா.ஆ.5 | - | I.A. No.392/2014-ன் எதிருரை நகல் |
| எ.ம.சா.ஆ.6 | - | வழக்கு நாட்குறிப்பின் நகல் |

**அரசுத் தரப்பு சான்று பொருள்கள்: இல்லை**

**சான்றுப் பொருட்கள்:-**இல்லை.

**குறிப்பு:-**

1. எந்த சாட்சியமும் மூன்று முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
2. இவ்வழக்கில் முடிவு குறித்து காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.30 21:07:11 +0530

நீதித்துறை நடுவர்,
திருவையாறு.